



# வீதிச்சட்டம்

# THE HIGHWAY CODE



KIRUBAA LEARNERS

கிருபா லேணர்ஸ்


Reg.No : DS 589

Government Approved

A Grade Driving Training School

| | | | |
|---|---|---|---|
| 226. கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>021 222 4353<br>0777 225 292 | 216. A9 வீதி,<br>வவுனியா.<br>024 222 7777<br>0777 100 444 | A9 வீதி,<br>கிளிநொச்சி.<br>021 228 5505<br>071 454 6955 | 94. பிரதான வீதி,<br>மன்னார்.<br>023 225 1656<br>077 847 2732 |

# வீதிச் சட்டமும் வேறு அறிவுரைகளும்




பாதுகாப்பான வினைத்திறனுள்ளதும், சுற்றாடலை நேசிப்பதுமான வாகனஞ் செலுத்துதல்.

## கிருபா லேணர்ஸ்

சாரதிப் பயிற்சிப் பாடசாலை
பதிவு எண் : 589

# பாதுகாப்பாக வாகனம் செலுத்தும் முறை

***வாகன விபத்துக்கள் ஏற்படுவதற்கான மூல காரணங்கள்***

*01.* வீதிப்போக்குவரத்து விதிகளைச் சாரதிகளும், தெருக்களை உபயோகிப்பவர்களும் சரியாக அனுசரியாமை.

*02.* கவனயீனமாக வாகனங்களைச் செலுத்துதல் / குழப்பமான மனநிலை.

*03.* அதிவேகத்துடன் வாகனங்களைச் செலுத்துதல்.

*04.* தெருக்களிற் செல்வதற்குத் தகுதியற்ற வாகனங்களின் பாவனை.

***வீதியில் விபத்துக்களைத் தவிர்க்கும் வகையிற் பாதுகாப்பாக வாகனங்களை செலுத்துவதற்குச் சாரதிகள் முக்கியமாகக் கவனத்தில் எடுக்கவேண்டியவைகள்.***

*01.* விபத்துக்கள் ஏற்படக் கூடும் என உணரப்படும் இடங்களில் முன்னெச்சரிக்கையுடன் அவதானமாக உரிய முறையில் வாகனங்களைச் செலுத்துதல்.

*02.* பாதுகாப்பான இடைவெளியில் வாகனங்களைச் செலுத்துதல்.

*03.* இயலுமானவரை தனது வாகனம் செலுத்தும் ஒழுங்கைச் சரியாகப் பேணல்.

*04.* பாதுகாப்பான முந்திச் செல்லும் முறை.

*05.* இதற்குமுன்னர் தான் பல ஆண்டுகாலம் எந்தவொரு விபத்தையும் சந்திக்கவில்லை என்ற மனோநிலையில், தான் தோன்றித்தனமாக வாகனத்தைச் செலுத்துவதைக் கைவிடல்.

### *பாதுகாப்பாக வாகனம் செலுத்தும் முறை*

பாதுகாப்பான முறையில் வாகனத்தைச் செலுத்தும் சாரதியானவர் மற்றைய சாரதிகளின் முறைகேடான வாகன செலுத்துகைக்கும், மோசமான தெருக்களின் நிலைமைத்தன்மைகளையும். காலநிலைகளையும் கருத்திற்கொண்டு எந்த நேரமும் முன்னேற்பாடான முறையில் வாகனங்களைச் செலுத்தவேண்டும். அத்துடன் வாகனமானது தெருக்களில் செலுத்துவதற்குரிய நிலையில் உள்ளதா என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

### ***யாழ். மாவட்டத்தில் வாகன விபத்துக்கள் விளைவிக்கும் விபத்துக்கள் அதிகரித்துக் கொண்டே காணப்படுகின்றன. அதற்கான காரணங்கள் பின்வருமாறு :-***

01. மது போதையில் வாகனம் செலுத்துதல்.

02. உள் வீதியிலிருந்து மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகளில் வருவோர்கள்; பிரதான வீதியில் வருகின்ற வாகனங்களைக் கவனியாது நேரடியாகப் பிரதான வீதிக்குள் நுழைதல்.

03. நாற்சந்தி(மத்திய வளைவு)களில் வலப்பக்கம் வருகின்ற வாகனங்கள் செல்வதற்கு இடங்கொடாமை.

04. ஏதோ ஒரு வாகனம் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளபோது அல்லது வாகனம் செல்லுகின்றபோது மோட்டார் சைக்கிளை அல்லது துவிச்சக்கர வண்டியை முன்னோக்கிச் செலுத்துகின்ற போது எதிரே வருகின்ற வாகனம் பற்றி அவதானம் இல்லாமல் வாகனம் செலுத்துதல்.

05. சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தக் கொடுத்தல்.

06. அளவுக்கு அதிகமான வேகத்தில் வாகனம் செலுத்துதல்.

07. வீதியில் ஒரே சமாந்தரத்தில் மூன்று அல்லது நான்கு துவிச்சக்கர வண்டிகளைச் செலுத்துதல்.

08. பாதசாரிகள் வீதிகளைக் கடந்துசெல்ல அடையாளமிடப்பட்ட இடங்களில் அவர்களுக்கு இடங்கொடாமல் வாகனம் செலுத்துதல்.

09. பாவனைக்கு தகுதியுள்ள வாகனங்களை வீதியிற் செலுத்துதல்.

10. சேதமான தேய்ந்த டயர்களுடன் வாகனங்களைச் செலுத்துதல்.

11. வீதியில் இடம் உள்ள இடங்களில் வாகனங்களை நிறுத்தாது நெரிசலான இடங்களில் வாகனங்களை நிறுத்தி வீதித் தடைகளை ஏற்படுத்தல்.

12. வீதி வளைவுகளில் எதிரே தெளிவற்றுக் காணப்படுகின்றபோது வாகனங்களை முன்னோக்கி செலுத்தல்.

13. வலப்பக்க வளைவிற் செல்லுகின்றபோது வாகனத்தை இடதுபக்க ஓரமாய்ச் செல்லாது; குறுகிய அளவில் வலது பக்கமாகவே பாரப்படுத்தி வளைவிற் செலுத்துதல்.

14. இரவு வேளையில் வெளிச்ச விளக்கு இன்றி அல்லது ஒருபக்க வெளிச்ச விளக்குடன் வாகனம் செலுத்துதல்.

15. இரவு வேளையில் எதிரே வருகின்ற வாகனங்களுக்குத் தமது வெளிச்ச விளக்கைக் குறைக்காமல் (டிம் இன்றி) வாகனத்தை செலுத்துதல்.

16. இரவு வேளையில் வீதியோரங்களில் வாகனத்தை நிறுத்தி விடப்படுகின்றபோது அபாய விளக்கு எரியப்பட விடாமை.

17. இரவு வேளையில் துவிச்சக்கர வண்டியில் வெளிச்ச விளக்கு இல்லாமலும், பின்பக்கச் சில்லுச் சேர்த்தாங்கியில் (மக்காட்) வெளிச்சம் (சிவப்புக்கல்) இல்லாமற் செல்லுதல்.

18. தலைக்கவசம் இல்லாமல் (ஹெல்மட்) மோட்டார் சைக்கிளிற் செல்லுதல்.

19. வீதியைக் கடக்கின்றபோது முதலில் வலப்பக்கமும் பின்னர் இடப்பக்கமும் மீண்டும் வலப்பக்கமும் பாராமல் வீதியைக் கடந்து செல்லுதல்.

20. பஸ் நிறுத்தப்பட்டுள்ளபோது பின்பக்கம் செல்லாது முன் பக்கத்தால் வீதியைக் கடத்தல்.

21. பாதசாரிகள், சைக்கிள்கள் ஓட்டுனர்கள், சாரதிகள் ஆகியோர் இரு பக்கங்களும் அவதானம் இல்லாமற் செயற்படல்.

22. வாகனங்களைச் செலுத்துகின்போது கையடக்கத் தொலைபேசியிற் பேசிக்கொண்டே வாகனத்தை செலுத்துதல்.

23. மேலே உள்ள குறைபாடுகளை அவதானித்துச் செயற்பட்டால் தாங்கள் விபத்துக்களில் இருந்து தப்பித்துக் கொள்வதுடன், விலை மதிக்க முடியாத உயிரையும், தங்களின் பெறுமதியான உடைமையையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

எதிர்காலங்களில் இந்தக் குற்றச் செயல்கள் சம்பந்தமாகச் சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராகப் பொலிசாரால் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

*மிதி வண்டி செலுத்தும் முறை*

01. முதலில் வீதியில் மிதிவண்டி செலுத்துவதற்கு நீங்கள் தகுதியுடையவரா என்பதனையும், உங்கள் மிதிவண்டிப் பொறிமுறை ரீதியில் நல்ல நிலையில் உள்ளது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

02. மிதிவண்டி ஓட்டுபவர்கள், மிதி சைக்கிள்கள் ஓட்டப் பாதையிருப்பின் அதனையே உபயோகித்தல் வேண்டும். இல்லாதவிடத்து இடது நடைபாதைக்கு அருகா மையாக ஒருவர் பின் ஒருவராகத் துவிச்சக்கர வண்டியை உருட்டிச் செல்லுதல் வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இரண்டு பேருக்கு அதிகமாகப் பக்கம் பக்கமாகச் செல்லுதல் கட்டாய மாகத் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

03. சைக்கிள் ஓட்டும்போது நகர்ந்துகொண்டிருக்கும் இன்னொரு வாகனத்தை அல்லது அவருடன் போய்க்கொண்டிருக்கும் மற்றுமோர் சைக்கிள் ஓட்டுபவரைப் பிடித்துச் செல்லுதல் கூடாது. சைகைகள் கொடுக்கும் நேரம் தவிர்ந்த ஏனைய வேளைகளிலும், திரும்பும்போதும் இரு கைபிடிச்சட்டத்தில் பிடித்திருத்தல் வேண்டும். போக்குவரத்துக்கிடையில் புகுந்து வளைவு நெளிவாக துவிச்சக்கர வண்டியை ஓட்டிச் செல்லுதல் தவிர்க்கப்பட வேண்டும். மிதி சைக்கிளின் முறையான கட்டுப்பாட்டிற்கு குந்தகம் விளைவிக்கக் கூடியதாக எப்பொரு ளையும் கொண்டு செல்லாதீர்கள்.

***வாகனத்தைச் செலுத்துவதற்கான அடிப்படையில் நிறைவு செய்யப்பட வேண்டிய விடயங்கள்***

அ) சாரதி வாகனத்தை செலுத்துவதற்குரிய நிலையில் இருத்தல் வேண்டும். (உடல் ரீதியாகவும்)

01. வாகனம் செலுத்தக்கூடிய நிலையில் இருக்க வேண்டும்.
02. வாகனத்தின் செல்லுபடியான காப்புறுதி அத்தாட்சிப்பத்திரம் இருத்தல் வேண்டும்.

*03.* சாரதிக்கான சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல்வேண்டும். (மேற்படி 3 அத்தாட்சிப்பத்திரங்களும் வாகனத்தைச் செலுத்தும் சந்தர்ப்பங்களில் கைவசம் வைத்திருக்க வேண்டும் என்பதை விசேடமாகக் கவனிக்கவும்)

ஆ) மதுபானம், போதைப் பொருள் பாவித்த சந்தர்ப்பத்தில் நித்திரை மயக்கம், களைப்பு, மனம் கிலேசமுற்ற சந்தர்ப்பங்கள், பணம் சம்பாதிக்கும் திடமான நோக்கு ஆகிய நேரங்களில் வாகனத்தைச் செலுத்துவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். மேலும் தொலைபேசி தொடர்பு, செருப்பு அணிதல், புகைப்பிடித்தல் என்பவற்றிலிருந்தும் விளங்கிக்கொள்ளவும்.

இ) வாகனத்தின் சுக்கானம், பிரேக், ஒலி வைப்பர், விளக்குச் சரியான முறையில் இயங்குகிறதா என்பதைக் கவனியுங்கள்.

ஈ) ஆசனத்தில் பட்டி இருந்தால் மாட்டிக்கொள்ளவும் பின்னால், பார்க்கும் கண்ணாடி, ஆசனம் என்பவற்றை உமக்கு ஏற்றபடி சரிசெய்து கொண்டு உமது வலது தோளுக்கு மேலாக பின்னாற் பார்க்கவும். இருபக்கங்களிலிருந்தும் வரும் வாகனங்களுக்குத் தொந்தரவு ஏற்படாதவாறு சைகைகாட்டி, பிரயாணத்தைப் தொடங்கவும்.

**மோட்டார் கோச்சுக்களும் லொறிகளும்**

| | | |
|---|---|---|
| நகரசபைப் பகுதிக்குள் | - | மணிக்கு 50 கி.மீ. |
| நகரசபைப் பகுதிக்கு வெளியே | - | மணிக்கு 60 கி.மீ. |

**மோட்டார் முச்சக்கர வாகனங்களும் மோட்டார் முச்சக்கர வான்களும்**

| | | |
|---|---|---|
| எப்பெருந் தெருவிலேனும் | - | மணிக்கு 40 கி.மீ. |

**விவசாய உபயோகவாகனங்கள்**

| | | |
|---|---|---|
| எப்பெருந்தெருவிலேனும் | - | மணிக்கு 40 கி.மீ. |

**மோட்டார் கார்கள்,மோட்டார் சைக்கிளும் மேலே குறிப்பிடப்படா வாகனங்களும்**

| | | |
|---|---|---|
| நகரசபைப் பகுதிக்குள் | - | மணிக்கு 50 கி.மீ. |
| நகரசபைப்பகுதிகளுக்கு வெளியே | - | மணிக்கு 70 கி.மீ. |

**Note**: பட எண் என்பது பின்பக்கம் உள்ள பட சைகைகளின் எண்களாகும். அவ் எண்ணுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

***கவனமாகச் செலுத்தவேண்டிய சந்தர்ப்பங்கள்***

பாதசாரிகள் வீதியைக் கடக்கும் இடம், பாதுகாப்பற்ற புகையிரதக் குறுக்குப்பாதைகள், சந்திகள், மலைச்சரிவுகள், வளைவுகள், பாடசாலை அதிகளவிலான வாகனங்கள், மக்கள் நடமாடும் பிரதேசம், ஈரலிப்பான பாதை, மழை, மூடு பனியுள்ள சந்தர்ப்பங்கள், மற்றும் காதுகேளாதோர், மாற்றுத் திறனாளிகள் சிறுபிள்ளைகள், விலங்குகள் என்பவற்றிலும் கவனஞ்செலுத்தவும்.

**பட எண் 94 (29.66) (9.12) 21.22 (1.6) 26**

***பாதசாரிகள் வீதியைக் கடக்கும் இடங்களிற்கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் (சட்டங்கள்)***

பாதசாரிகள் கடக்கும் மஞ்சள் கோட்டில் நிறுத்துதல், வாகனங்களுக்கு முன்னால் கடந்து செல்ல, ஹோரணை ஒலிக்கச் செய்யக் கூடாது. பாதசாரிகளுக்குக் கடந்துசெல்ல இடம் கொடுக்க வேண்டும். **பட எண் – 94**

***வாகனங்களை முந்தி ச்செல்லக்கூடாத சந்தர்ப்பங்கள்***

பாதசாரிகள் மாறும் இடங்கள், தீவிர வளைவு, மலை முகடு, அம்பு வடிவிலான பாலம், சந்தி, பாதையின் குறுகலான பகுதி, சமிக்ஞைக் கட்டுப்பாட்டினாற் குறிக்கப்பட்ட இடம். தனியான இரு வெள்ளை நிற கோடுள்ள பாதை அடையாளங்களை மறைக்கும் வகையிலும் வாகனங்களும் மக்கள் நடமாட்டம் அதிகமான பிரதேசங்கள் மேற்படி குறிப்பிட்ட இடங்களிலோ அல்லது அவ்விடங்களை அண்மிக்கும்போதோ வேறு வாகனங்களைக் கடந்துசெல்லக் கூடாது.

**பட எண் 94 (1,6) 22. 16, (9,12) 7, 41 (88.86)**

### *சிறிய வீதியிலிருந்து பிரதான வீதிக்கு வாகனம் செலுத்தும் போது*

பிரதான வீதியில் இருபக்கங்களிலும் அண்மையாக வரும் அனைத்து வாகனங்களுக்கும் செல்வதற்கு இடமளிக்க வேண்டும். **பட எண் 64, 82, 83.**

### *சுற்றுவட்டத்தின் சட்டம்* (Roundaboard)

வலது பக்கமாக அண்மையில்வரும் சகல வாகனங்களுக்கும் செல்வதற்கு இடமளிக்க வேண்டும். **பட எண் 19,63, 82**

### *வாகனத்தை நிறுத்துவதைத் தடைசெய்யும் இடம்*

கட்டுப்பாட்டுச் சைகைமூலம் குறிப்பிட்ட இடம் (ப.வி.47, 48, 49, 50, 87) பாதசாரிகள் கடக்கும் இடம், சந்தி வளைவு, மலை முகடு, பஸ், துவிச்சக்கர வண்டி ஒதுங்கும் இடங்கள், பஸ் நிறுத்துமிடம், பாதையின் குறுகலான இடம், பாலத்தின்மேல் தனியான, சோடியான வெள்ளை நிறக் கோடுகள் புகுமிட பாதை அடையாளமிடப்பட்ட இடங்கள், நடைபாதை மேலாக வாடகைக் கார் தரிப்புக்கள், தீயணைப்பு நீர்க்குழாய்க்கு அருகில், அதிவேக ஓடுபாதையின்மேல் ஏதாவது இடங்களின் உட்செல்லும், வெளியேறும் கதவு(Gate)களுக்கு அருகில், ஒரு சில காரணத்தால் தற்காலிகமாகப் பாதைத்தடை ஏற்பட்ட இடம்.
**பட எண் (94) (9,12) (1,6) (21,22) (74,78) 72, 8, 16, 86, 88.**

### *வாகனத்தை முந்தீச் செல்லும்போது*

01. முன்னாற் செல்லும் வாகனத்தைக் கடந்துசெல்ல உமக்குத் தேவையெனின் முன்பாதைத்தடையேதுமின்றித் தெளிவாகத் தெரிகிறதென்றால் கண்ணாடியைப் பார்த்து வலது பக்கம் திரும்பும் சைகை காட்டி; முன்வாகனத்திற்கு அறிவித்து; அவ்வாகனத்தைக் கடந்து விரைவாகச் செலுத்தவும் கடந்து சென்ற வாகனத்தின் பயணத்திற்குத் தடை ஏற்படாதவாறு செல்லவும், உமக்கு நேர் எதிராக முன்னால்வரும் வாகனத்தைப் பற்றியும் விசேட கவனஞ் செலுத்தவும். அணையும், எரியும் பிரதான விளக்கு நீர் வருவதுபற்றி மட்டுமே உணர்த்தும், அதில் உமக்கு முக்கியத்துவம் கிடையாது. (5வது சம்பந்தப்பட்டது)

02. வேறு ஒரு வாகனம் உமது வாகனத்தை கடந்துக் செல்லும் போது உமது வாகனத்தின் வேகத்தைக் குறைத்துப் பாதையில் இடமளிக்கவும்.

03. முன்வாகனம் வலது பக்கம் திருப்புவதற்குச் சைகை காட்டினால், பாதுகாப்பு உள்ளதெனில் இடப்பக்கமாகக் கடந்துசெல்லவும். அச்சந்தர்ப்பங்களைத் தவிர வேறு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வலது பக்கமாகக் கடந்து செல்லவும்.


***வாகனங்களுக்கிடையிலான இடைவெளி***

முன்னாற் செல்லும் சாரதி தமது வாகனத்தை நிறுத்திக் கொள்ளும் முகமாகத் தேவையான அளவு இரண்டு வாகனத்திற்கும் இடைவெளி வைத்துக்கொள்ள வேண்டும். வாகனத்தின் வேகத்திற்கேற்பப் பிரேக் பாவிக்கும் தூர அளவு கூடும்.
கீழ் அட்டவணையைப் பார்க்க.


| வேகம் ம.கி.மீ | வாகனங்களுக்கிடையான இடைவெளி | நினைக்கும் கால தூரம் | பாவிக்கும் தூரம் |
|---|---|---|---|
| 35 எனின் | மீ 12 க்கு | மீ 6 | மீ 6 |
| 50 எனின் | மீ. 23 க்கு | மீ 9 | மீ 14 |
| 65 எனின் | மீ. 40 க்கு | மீ 12 | மீ 28 |
| 80 எனின் | மீ.56க்கு | மீ 15 | மீ 41 |

# சந்திகளில் வாகனம் செலுத்தும் முறை


## 01. T சந்தி




## 02. சுற்றுவட்டம்



## *03. நாற் சந்தி*




### *மேலேயுள்ள படங்களைக் கவனிக்க.*

*01.* எதிரில் உள்ள சந்தியில் இடப்பக்கமாகத் திருப்பவேண்டு மென்றால் முதலாவது கண்ணாடியை பார்த்துத் திரும்பும் சைகை காட்ட வேண்டும். பின் பார்க்கும் கண்ணாடியிற் பாதுகாப்புடன் பார்த்து இடப்பக்கமாகக் கோட்டில் வாகனத்தைச் செலுத்தவும்.

*02.* முன்னே வலது பக்கத்தில் திருப்ப வேண்டுமெனில் முதலாவது கண்ணாடியைப் பார்த்து; திருப்பும் சைகையைக் காட்டவும். பின், பார்க்கும் கண்ணாடியிற் பாதுகாப்புடன் பார்த்து; வலது பக்கத்தில் திரும்பும் வலது கோட்டில் வாகனத்தைச் செலுத்தவும்.

03. பாதையில் நேரே முன்செல்ல வேண்டுமென்றால் இடமாகவும், மூன்று வாகனஞ் செலுத்தும் இடைவெளியுள்ள பாதையெனில் மத்தியில் அமைந்துள்ள வாகனப் பாதையில் செல்லவும்.

04. சந்திகள் விளக்கு சைகை (ஒளி) கள் மூலமும் பொலிஸ் சைகை மூலமும் செயற்படுத்தப்படுகின்றன. இவ்விரு முறையிலும் செயற்படுத்தப்படாத நிலையில் நாற் சந்தியில் வலப்பக்கமாக வாகனங்களுக்கு இடமளிக்க வேண்டும். T அமைப்புப் போன்ற சந்தியில் நீர் பிரதான பாதையில் இருந்து வலப்பக்கமுள்ள கிளைப்பாதைக்குத் திரும்பும்போது முன்னேவரும் வாகனங் களுக்கு இடமளிக்கவும்.

## *வாகனத்தை நிறுத்தி வைத்தல்*

1) வாகனத்தை நிறுத்துவதற்கு எண்ணினால் பிரயாணஞ்செய்யும் திசைக்கு முகம் காட்டி வேறு வாகனங்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு இடது பக்கத்தில் நிறுத்தவும். என்ஜினை செயல் இழக்கச்செய்து; ஹோன் பிரேக் இழுத்து; விசேடமாகப் பின் பக்கம் பார்த்துக் கதவை திறக்கவும். பூட்டியும் விடவும்.

2) கீழ்க்காணும் இடங்களில் வாகனம் நிறுத்தக்கூடிய தூர அளவு காட்டப்பட்டுள்ளது.
பாதசாரிகள் கடக்கும் இடத்திலிருந்து மீ. 15
தீயணைக்கும் நீர்க்குழாய் அமைந்துள்ள இடத்துக்கு மீ. 15.
சந்திகளிலிருந்து மீ. 25.
பஸ் நிறுத்துமிடங்களிலிருந்து மீ. 30

## *பின்பக்கத்திற் செலுத்துதல்*

பின்பக்கமாகச் செலுத்தும்போது பார்வை தெளிவாக இல்லாதபடியாற் கவனமாகச் செலுத்தவும், கிளைப் பாதையில் இருந்து பிரதான பாதைக்குப் போவது கூடாது. பிரதான பாதையில் இருந்து சிறு பாதைகளுக்கு வாகனத்தை செலுத்தலாம்.

## இரவு நேரத்தில் ஓட்டுதலும்; நிறுத்தி வைத்தலும்

1) நித்திரை மயக்கம், களைப்பு மிகுதியாக இருப்பின் ஓட்டுவதைத் தவிர்க்கவும்.

2) வாகனத்தின் முன்கண்ணாடி தெளிவில்லையெனில், கழுவிச் சுத்தமாக்கிக் கொள்ளவும். மழை மற்றும் மூடுபனி என்பனவற்றிற்கு விசேடமான கவனஞ்செலுத்தவும்.

3) பாதையில் வேறு வாகனங்கள் முன்னே எதிர்ப்படும் வேளையில் உமது பிரதான விளக்கின் வெளிச்சத்தைக் குறைத்துக் கொள்ளவும். எதிர்வாகனத்தின் பிரதான விளக்கு ஒளியில் உமது கண், ஒளித்தாக்கம் பெற்றால், வேகத்தைக் குறைக்கவும், பாதை தெரியவில்லை என்றால் வாகனத்தை நிறுத்தவும், விசேடமாகச் சாரதியின் பக்கமாகவுள்ள விளக்குச் செயலிழந்த வேளை விபத்து ஏற்படவாய்ப்புண்டு.

4) வாகனத்தை நிறுத்தவேண்டுமெனில் பாதையில் ஓடும் வாகனங்களுக்குத் தடை ஏற்படாதவாறு நிறுத்தும் விளக்கை எரியவிட்டுப் பிரயாணஞ் செய்யும் திசைக்கு முகங்காட்டி இடது பக்கத்தில் நிறுத்தவும்.


## சைகை விளக்கின் மூலம் வாகனத்தைச் செயற்படுத்தல்



1) சிவப்பு நிறம் : - நில்
சைகை விளக்கில் சிவப்பு நிறம் காட்டினால் நிறுத்தும் கோட்டின் பின்னே நிறுத்த வேண்டும்.



2) சிவப்பும் செம்மஞ்சள் நிறமும் : - செல்வதற்குத் தயாராகச் சிவப்பு விளக்கு எரியும்போது செம்மஞ்சள் விளக்கு எரியத் தொடங்கினால், பச்சை விளக்கு எரிவதற்கு அண்மித்துள்ளது என்பதாகும். ஆகையாற் செல்வதற்குத் தயாராகவேண்டும். (முன்னுக்குச் செல்லக் கூடாது)




3) பச்சை நிறம் : - செல்
பச்சை விளக்கிற்கு முகங்காட்டி நிற்கும் வாகனங்கள் நேரே முன் செல்ல முடியும் பாதுகாப்புள்ளதெனில், இடப்பக்கமோ வலப்பக்கமோ செலுத்த முடியும்.



4) செம்மஞ்சள் நிறம் : - நில்
சிவப்பு நிற வெளிச்சம் எரிவதற்கு மிகவும் குறுகிய நேரமே இருக்கிறது நில்.

5) சிவப்பு நிறமும் பச்சை அம்புக்குறி :-




சிவப்பு நிறமும் பச்சை அம்புக்குறியின் அடையாளமும் பச்சை நிற அம்பு காட்டும் திசையால் மட்டும் ஓட்டுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்பதே.

6) விட்டு விட்டு எரியும் செம்மஞ்சள் சமிக்ஞை :-



விட்டு விட்டு எரியும் செம்மஞ்சள் நிற சமிக்ஞையில் அறிவிப்பதாவது சமிக்ஞை விளக்கு மூலமோ, பொலிஸ் சமிக்ஞை மூலமோ செயற்படவில்லை என்பதே. அப்படியெனில் சாதாரணமாகச் சந்திகளில் நடைமுறைப் படுத்தப்படும் வீதிச்சட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். (2-4) சம்பந்தமானது.

7) விட்டுவிட்டு எரியும் சிவப்பு நிற சமிக்ஞை :-



அதில் அறிவுறுத்தப்படுவது புகையிரதக் குறுக்குப் பாதை, தீயணைப்பு மத்தியஸ்தானம் ஆகியன அவ்வித இடங்களில் வாகனத்தை நிறுத்தி இடமளிக்க வேண்டும். (இச் சைகைகளுக்குக் கட்டாயமாக அடிபணிய வேண்டும்)

***திடீர் விபத்து***

1) உமது வாகனம் செயலிழந்துவிட்டால் இயன்றளவு கெதியில் வாகனத்தைப் பாதையில் இருந்து வெளியே எடுக்கவும். திடீர் விபத்தொன்றின்போதுகூட, விபத்து நடந்த மற்றவர்களுடன் பேசி; விபத்துக்கான வாகன அடையாளமிட்டு, பாதையிலிருந்து வெளியே எடுக்கவும். பாதையிற் செல்லும் எந்தவொரு வாகனத்திற்கும் எந்தவொரு இடையூறும் நடக்கக்கூடாது.

**★ விபத்து நடந்தால் 24 மணித்தியாலத்திற்குள் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கவேண்டும்.**

2) ★ காயங்களுக்குள்ளான ஒருவரால் வேண்டும் பட்சத்தில் அல்லது விபத்தின் காரணமாக அவரின் உயிருக்கு ஆபத்தான நிலை என்பதாக நினைப்பின்; காயம்பட்டவரை உடனடியாக அருகிலுள்ள ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லவும். வாகனத்தை நிறுத்தாது தப்பியோடுவதைத் தவிர்க்கவும், விபத்து ஏற்பட்டாற், சாரதி; வாகனத்தை முதலாவது நிறுத்தவேண்டும்.

3) ஏதாவதொரு பொலிஸ் உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர், காயப்பட்ட ஆள் ஒருவர். நஷ்டமேற்பட்ட ஒருவர் அல்லது சொத்துரிமையாளர் அல்லது பொறுப்பான எவராவது உமது பெயர், முகவரி, சொந்தக்காரரின் பெயர், முகவரி வாகனத்தின் இலக்கம் ஆகிய விபரங்களைக் கேட்கும் போது பிழையின்றிக் கொடுக்கவேண்டும்.

4) விபத்து நடந்த வேளை நீர் வாகனத்தைச் செலுத்தியதாகவும், உமது பெயர், முகவரியுடன் எல்லா விபரங்களையும் அருகில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தில், அதன் பொறுப்பான பொலிஸ் அதிகாரியிடம் உடனடியாகத் தெரிவிக்கவேண்டும்.

5) விபத்து நடந்த வாகனத்தை வெளியே எடுக்கமுடியாத சந்தர்ப்பத்தில் அபாயத்தை அறிவுறுத்தும் விளக்கை எரிய விடவேண்டும்.

6) திடீர் விபத்தைத் தவிர்க்கும்போது வாகனத்தைக் கட்டுப்படுத்த முடியாத வேளையில், வீதிச்சட்டத்தை மீறுதல் குற்றமாக இல்லை.

***தெரிந்துகொள்ளவேண்டிய வேறு விடயங்கள்***

உமது வாகனத்தின் மேலதிக சக்கரத்துடன் ஜெக் வீல்பிரஷ் வைத்துக்கொள்ள வேண்டும். அவசரத்துக்கு ரயரொன்றை மாற்றிக்கொள்ளும் ஆற்றல் இருக்க வேண்டும்.

- உமது வாகனத்தின் எரிபொருள், றேடியேட்டரிலும், பெற்றரியில் நீர் இருக்கிறதா என்பதைப் பார்க்கவும், பிரேக் ஒயில், எஞ்சின் ஒயில் இருக்கிறதா என்பதைக் கவனத்திற் கொள்ளவும். (அது பற்றிச் சிவப்பு மின்சார ஒளிவாயிலாக அறியலாம்)

- பாதையினருக்குச் சைகை :- குறியீட்டுச் சைகை பாதை அடையாளங்கள்.

- சைகை வகை :- ஆபத்தைத் தெரிவிக்கும் சைகை, கட்டுப்பாட்டுச் சைகை, விபர சைகை, வரையறைச் சைகை, முக்கியத்துவ சைகை என்பன)

- சைகை (சிக்னல்) எதிர்பார்ப்பானது :- தனது செயற்பாட்டை மற்றவர்களுக்கு அறிவிப்பது.

- ஆபத்தைத் தெரிவிக்கும் விளக்கை பாவிக்கும் நேரம் :- வாகனம் உடைந்த நிலையில் இருப்பதை அறிவிப்பதற்கு மட்டுமே, கட்டாயமாக நிறுத்தி வைத்துள்ள வேளையில் அல்லது இழுத்துக் கொண்டு போகும் வேளையில்.

- வளைவுகளில் வேகத்தைக் குறைப்பதற்காக :- பிரேக்கை வளைவை அடைவதற்கு முன்னரே உபயோகப்படுத்த வேண்டும்.

- குருடனை அறிந்து கொள்ள :- வெள்ளைக் கைத் தடியினால் பிரதான விளக்கின் பகுதிகள் : பிரதான ஒளி, மந்த ஒளி.

- ஓட்டும்போது எந்த நேரமும் வாகனம் இருக்க வேண்டியது :- இடப்பக்கம் (ஓட்டப்பாதையிற் செலுத்தும்போது இது அவசியமில்லை ஓட்டப்பாதையிற் செல்லவும்)

நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனத்தைக் கடந்துசெல்லும் போது முக்கியமாகக் கவனிக்க வேண்டியிருப்பது, நிறுத்தி வைத்துள்ள வாகனத்தின் பின்பக்கத்தில் நடந்து செல்பவர் பாதைக்குப் பாய்வதற்கு இடமிருப்பதாலும், வாகனத்தின் பாதைப் பக்கமாகக் கதவுகளை திறப்பதற்கு இடமிருப் பதாலுமே.

- வாகனத்தின் வேகத்தை அதிகரிக்கக் கூடாத சந்தர்ப்பம் வளைவு ஒன்றில் வழுக்கும்போது.

- வாகனத்தின் பிரேக்கை உபயோகிக்கக் கூடாத வேளை :- வழுக்கும்போது.

- வாகனமொன்று வழுக்கிச் செல்வதற்கு ஆரம்பிக்கும்போது செய்ய வேண்டியது :- எக்சிலேட்டரைக் கைவிடுதல்; வழுக்குவது பின்பக்கச் சக்கரமொன்றால் வழுக்கும் பக்கத் திற்குச் சுக்கானைச் சுற்றுதல். (திருப்புதல்)

- வலது பக்கமாக ஓட்ட முடியுமான வேளைகள் :- (முந்திச்செல்லும்) போதோ, அல்லது வலப்பக்கம் திரும்பும் வேளை.

- பாதையைக் கடக்கும் கோட்டின் இரு பக்கங்களிலும் சீப்ரா கோடு (நெளிவான கோடு) இழுக்கப்பட்டிருந்தால், எதிரிற் பாதசாரிகள் பாதைமாறும் இடம் இருக்கின்றது என்பதை அறிவிப்பதாகும்.

- பின்னால்வரும் வாகனத்தைப் பற்றிப் பின்பார்க்கும் கண்ணாடியில் தெரியும் தூரம் அளவு ( இயற்கையான தூரம்) சரியானவை அல்ல. அது பற்றிக் கவனம் செலுத்தவும்.

- நீர் ஒரு திறமான சாரதி என்பதற்கு, வீதிச் சட்டங்களுக்கு மதிப்பளித்துக் கவனத்துடன் ஓட்டுவதே ஆகும். உமக்கு எதிரில் இருக்கும் எந்தவொரு வாகனமோ அல்லது மனிதரோ; அவர்கள் சம்பந்தமாக அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகள் பற்றி உடனடியாக உணர்ந்துகொள்ளும் ஆற்றல் கொண்டிருக்க வேண்டும். அவரின் செயலுக்கு முன்னரே அது பற்றி விளக்கிக்

கொண்டு விபத்தை தவிர்த்துக்கொள்ளும் திறமையிருக்க வேண்டும். திடீர் விபத்து ஏற்படுவதற்கு இடமுள்ள வேளையில் நல்ல மனத்திடனும், விபத்தைத் தவிர்த்துக் கொள்ளவும், தனக்குக் கட்டுப்படுத்தக்கூடிய வகையிலேயும் வாகனத்தை ஓட்ட வேண்டும்.

## தொழில் நுட்ப அறிவு

***என்ஜின்***

◇ என்ஜினின் (இயந்திரம்) சக்தி குறைவு (அன்டக்கெம்பிறேசன்) கண்டுகொள்ளல் :-
இயந்திரத்தில் எண்ணெய் விடும் மூடியில் எண்ணெய் வெளியேற்றுதல், பிலிதரிதல் புகைவெளியேறுதல். டீசல் அல்லது பெற்றோல் வாகனங்களின் ரின்செட் அல்லது ஸ்லீவ் தேய்வதால் சைலன்சரில் நீலப் புகை வெளியேறுதல், டீசல் வாகனத்தில் இன்ஜெக்டர் அல்லது பொம்ப் சரியாக இயங்காத சந்தர்ப்பங்களில் அல்லது பெற்றோல் வாகனங்களின் காபறேற்றர் சரியாகப் பூட்டப்படாதவிடத்து பச்சைப் பெற்றோல் வரும் அதே வேளை கரும்புகை வெளியேறும்.

★ இயந்திரத்திற்கு எண்ணெய் (என்ஜின் ஒயில்) விடுவதற்குக் காரணம் :- இயந்திரத்தின் பிரிவுகள் வழுக்கிச் செல்ல (அசையும் உதிரிப்பாக உராய்வுத் தன்மையை குறைப்பதற்கு)

◇ இயந்திரத்தின் எண்ணெய் மட்டத்தைப் பரிசோதித்தல் :-
ஆழத்தைப்பார்க்கும் அளவு கோளினால் (டப்ஸ்டிக்)

◇ இயந்திரத்தில் எண்ணெய் குறைவதற்கான காரணம் :-
வெளியே எண்ணெய் வெளியேறுதல் அல்லது எண்ணெய் கருகுதல்

★ இயந்திரம் வெப்பமாதல் :- (F)பான்பெல்ட் தளர்வடைதல், ரேடியேற்றரில் தண்ணீர் இல்லாது போதல், அல்லது தண்ணீர் போக்குவரத்துத் தடைப்படுதல் காரணமாகும்.

◇ இயந்திரம் சூடேறுவதைத் தெரிந்துகொள்வது :- ரேடியேற்றரில் தண்ணீர் சூடாவதிலிருந்து

◇★ இயந்திரம் செயற்படாமை (வேலை செய்யாமை) : பெற்றரியின் குறைவாடு, டைனமோ மோட்டர் வேலை செய்யாமை, இயந்திரம் அடைப்படுதல்.

◇ இயந்திரத்தை உயிரூட்டும்போது (இழுத்து இழுத்து) செயற்படல்: பெற்றரி இறங்குதல். மோட்டரில் உள்ள குறைபாடுகள்.

◇ (F)பான்பெல்ட் தளர்வடைந்தால் இயந்திரம் அளவிற்குமேற் சூடேறும். பெற்றரி சார்ஜ் ஆகாது.

***பிரேக்***

◇ பிரேக் இல்லாதபோது செய்யவேண்டியது :- சிலதடவை பிரேக்கை விட்டுவிட்டு மிதித்தல், ஹேன்பிரேக் இழுத்தல். இயந்திரத்தின் செயற்பாட்டை நிறுத்துதல், பாரமான (வலுவான) கியரை (1-2) போட்டு 'கிளச்' சை மிதிக்காது இருக்க வேண்டும்.

◇ பிரேக் இல்லாது போவதற்குக் காரணம் :- பிரேக் ஒயில் (எண்ணெய்) அற்றுப்போதல், காற்றுப் பையில் காற்று இல்லாது போதல், மற்றும் மணல், எண்ணெய்ப் பசையுள்ள இடங்களிற் பிரேக் போடும்போது வழுக்கிச் செல்வதற்கு ஏதுவாகும்.

◇ பிரேக் ஒயில் (எண்ணெய்) குறைவதற்குக் காரணம் : - சிலிண்டர் தேய்வடைதல், பிரேக் வொசர் தேய்வடைதல்.

◇★ வாகனத்தில் ஒரு சக்கரத்தில் பிரேக் ஒயில் கசிவு ஏற்பட்டால்:- பிறேக்கை அழுத்தும்போது எண்ணெய்க் கசிவு ஏற்பட்ட சக்கரத்தின் எதிர்பக்கம் வாகனம் இழுபடும்.

◇ ஓடும்போது பிரேக் உபயோகித்தால் ஒரு பக்கத்திற்கு இழுபடுவதென்றால் :- பிரேக் சரியாகச் சமனளவிற் பொருத்தப்பட்டிராமை (முன்பக்க ஒரு சக்கரத்தில் பிரேக் கூடுதலாகும்). பிரேக் லைனஸ்களுக்கு எண்ணெய் சிதறுதல் காரணமாகும். ஒரு சக்கரத்திற் காற்று அதிகமாதல், ஒரு டயர் தேய்ந்துவிட்டதாற் பிரேக் பாவிக்க முடியாத சந்தர்ப்பங்களில் கூடப் பக்கத்திற்கு இழுபடுவதற்கு ஏதுவாகும்.

◇ வாகனத்தை நிறுத்தும்போது:- பிரேக் பெடலை மிதித்து இயந்திரம் நிற்பதற்கு அண்மிக்கும்வேளை கிளச் பெடலை மிதிக்கவேண்டும். பின்னர் கியரை நிவ்ப்டல் செய்யவும்.

◇ ஹைட்ரொலிக் பிரேக் வேலை செய்வது :- எண்ணெயில்

***கியர்***

◇ கியர் பெட்டியொன்று இருப்பதன் உபயோகம் :- வாகனத்தின் வேகத்தை மாற்றுவதற்காக

◇★ கியர் போடுவதற்கு கடினமாவது :- கிளச்சு உரிய முறையில் செய்றபடாமை / கியர் பெட்டியின் குறைபாடு.

***பெற்றரி***

◇ பெற்றரியிலுள்ள பிரயோசனம் :- இயந்திரத்தை இயக்குவதற்கும் (விளக்கு, ஹோரான்) செயற்படவைப்பதற்கும்.

◇★ பெற்றரி சார்ஜ் (மின் புகுத்தல்) ஆகவில்லையெனில்:- முதலாவது (F)பான்பெல்ட்டைப் பரிசீலிக்கவேண்டும். அத்துடன் பெற்றரி ஒல்டனேடர் அல்லது கட்டவுட் ஆகியவை பரிசீலனை செய்யவேண்டும். சார்ஜ் ஆகாததை எம்பியர் மீட்டரில் அல்லது சிவப்புக் குமிழ் வாயிலாகக் காணமுடியும்.

◇ பெற்றரி ஓவர் சார்ஜ் (அளவுக்குமீறிய மின் புகுத்தல்) ஆகுதல் :- அதிகமாக மின்சாரம் பெற்றரிக்குச் செல்வதால்

◇ பெற்றரிக்கு அதிகமாகத் தண்ணீர் ஊற்ற வேண்டியதற்கான காரணம்:- கூடுதலாக ஓவர் சார்ஜ் ஆவதன் காரணமாக

◇ ஓட்டும்போது பிரதான விளக்குடன் ஹோரன் செயலிழந்தால் :- பெற்றரி இறங்குதல், பெற்றரியின் வயர் தளர்வடைதல்

◇ ஓட்டும்போது பிரதான விளக்கு அல்லது ஹோரன் (ஒளிஎழுப்பி) தனித்தனியாக செயலிழந்தால் அதற்கு சம்பந்தப்பட்ட பியூஸ் சோதனை செய்யவும்.

◇★ தீப்பிடிக்கும் சந்தர்ப்பத்தில் (வயர் எரிந்து நாற்றம் ஏற்பட்டால்) :- பெற்றரியின் வயரை உடனே கலட்டி சாக்கொன்றினால் தீயை மூடவும்.

◈ ஒல்டனேட்டரின் உபயோகம் :- மின்சாரத்தை உற்பத்தி செய்வதே.

**கிளச்**

◈ கிளச் ஒன்றின் உபயோகம் :- கியர் பெட்டியின் இயந்திரத்தையும் இணைத்துக்கொள்ளல் அல்லது பிரித்துக்கொள்ளல்

◈ கிளச் வழுகிச் செல்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளல் :- இயந்திரத்தின் வேகத்திற்கேற்ப வாகனம் செல்லாமை (ஆரம்பிக்கும்போது தளர்வான கியரொன்றின் வேகத்தைக் கூட்டும்போது அதிகமான இரைச்சலுடன் கிளச் பிளேட் வழுகிச் செல்லல்)

◈ கிளச் வழுகிச் செல்வதற்குக் காரணம் :- கிளச் பிளேட் தேய்வடைதல், பிரஷர் பிளேட்டில் பிரஷர் (அமுக்கம்) குறைவடைதல், கிளச்சிக்கு எண்ணெய் படுதல்.

◈ கிளச் வழுகிச் செல்கிறது என்பதைச் சோதிப்பது :- ஹேன் (கை), பிரேக் இழுத்து வாகனத்தை உயிரோட்டி வழுவான (பாரமான) கியருக்கு (1-2) போட்டு அதன்பிறகு மெதுவாகக் கிளச்சை விடவும். கிளச் நல்லதென்றால் இயந்திரம் இயங்குநிலை நின்றுவிடும்.

**சுக்காணம் (சுக்காணி)**

◈ ஓட்டும்போது சுக்காணம் அசைதல் :- பெட்டி சரியான வகையில் வைக்கப்படாமை (போல் ஜொயின்ட் கிம்பின்புஷ் சக்கில்பின்ரேஷர் மற்றும் டயர் ரோட் தேய்வதன் காரணமாவதுடன் முன் பக்கிச் சக்கரங்களிற் காற்றுக் குறைவு, கூடுதலாலும், தேய்வுற்ற டயர் இருப்பதும் காரணமாகும்.

◈ சுக்காணம் இறுக்கமாதற்குக் காரணம் :- சுக்காணம் பெட்டி இறுக்கமடைதல் (கிரிஸ் இல்லாது போதலினாற் சுக்காணம் பெட்டியில் போல் ஜொயின்ட் மற்றும் கிம்பின் புஷ் இறுக்கமடைதல், முன் சில்லுகளிற் காற்றுக் குறைவடைந்த நிலையிலும் சுக்காணம் இறுகும்) பவர் ஸ்டியரின் என்ற ஹைட்ரொலிக் பொம்பில் எண்ணெய் இருக்கிறதா என்பதைப் பார்க்கவும்.

◇★ சுக்காணம் ப்ளே (சுதந்திரமாக சுற்றும் அளவு) கூடுவதற்குக் காரணம்: சுக்காணம் பெட்டியின் பகுதிகள் சரியான முறையில் இறுக்காமல் விடுதல் (போல் பெஜின்ட், வீல் பெயாரின் தளர்வடைதல், டயர் ரோட் தேய்வடைதல் காரணங்களாகும்.

*டயர்*

◇ டயர் ஒருபக்கம் தேய்தல் :- எலயிமஸ்களின் வித்தியாசம்

◇ டயர் இடத்திற்கிடம் தேய்தல் :- ஷொக்அப்ஷோபர் கெட்டிருந்தால்.

◇★ டயர் மத்தியில் தேய்தல் :- காற்றுக் கூடியிருத்தல்

◇★ டயர் இருபுறமும் தேய்தல் :- காற்றுக் குறைந்திருத்தல்

◇ (சாதாரணமாக டயர் சீக்கிரமே தேய்வதற்கு அதிக வேகமும் காரணமாக அமையும்)

◇ வளைவுகளில் டயர் சத்தமெழுப்புவது:-
எலயிமன்ஸ் சரியான வகையில் அமைக்கப்படாமையால் டயர்களில் காற்று கூடுதல்; குறைதலும் காரணம் ஆகலாம்.

◇★ டிபரன்சரின் நன்மைகள், டிபரன்சரின் செயற்பாடுகள்

◇ வளைவுகளில் இருபுறமும் உள்ள சில்லுகளின் வேகம் கூட்டவும், குறைக்கவும் (வளைவுகளில் கிட்டே திருப்பப்படும் சக்கரமும் தூரத்தில் திரும்பும் சக்கரமும் வித்தியாசமாக சுழல்வதனால் ஆகும்)

◇ பிரண்ட் வீல் (முன்சில்லு) வாகனமொன்றால் :-
என்ஜினும் கியர் பெட்டிக்கு முன்னால் உள்ள சில்லுகளுக்குச் சம்பந்தப்பட்டுச் சக்தியைப் பெற்றுக் கொடுத்தல்.

◇ டீசல் வாகனத்தில் எண்ணெய் முடிந்து பொம்பவுக்குள் காற்று நிரம்பினால் :- டீசல் விட்டு பொம்பவில் காற்றை அகற்றலாம்.

◇ அடிச்சட்டம் உடைவதால் நடப்பது :-
வர்கனத்திற்குப் பாரத்தைச் சுமந்து நிற்பது கடினமாகும் . வாகனத்தின் அமைப்பு வித்தியாசமடையும்.

★ *நீர்ச்சுழற்சிப் பம்பியின் செயற்பாடு (வோட்டர் சேர்க்கிலேசன்)*

எஞ்சினுக்குள் நீர்ச் சுற்றோட்டதை ஏற்படுத்துவது.

## *பிற்பக்கங்களில் உள்ள சைகைப் படங்களின் மேலதிக விளக்கம் (பட எண்ணுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்)*

◇ **பட எண் : 16**

குறுகிய பாலம் முன்னே எதிரில் வரும் வாகனத்துடன் குறுகிய பாலத்தில் மாறவேண்டாம். கடப்பதற்கும் எத்தணிக்க வேண்டாம்.

◇ **பட எண் : 47**

இதுபோன்ற கட்டுப்பாட்டுச் சைகை உள்ள பக்கம் வாகனத்தை நிறுத்தக்கூடாது என்ற போதிலும், அவசர நேரத்தில் இயந்திரத்தை நிறுத்தாது வாகனத்தை நிறுத்த முடியும்

◇ **பட எண் : 48**

இதில் தெரிந்துகொள்ள வேண்டியது: எக்காரணம் கொண்டும் நிறுத்தவோ, தரிக்கவோ கூடாது என்பதாகும்.

◇ **பட எண் : 147-148**

இந்த மேலதிக அறிவித்தற் பலகை உட்படுத்தப்பட்டுள்ளது. எந்தவொரு ஆபத்து அறிவிப்புச் சைகை, கூடாதென்ற சைகை அல்லது கட்டுப்படுத்தப்பட்ட சைகை ஏற்படும்போது குறிப்பிட்ட தூர அளவு அறிவிப்பதாகும். அப்பாதை சைகைக்குக் கீழ் மேலதிகமாகச் சாரதிகளுக்கு, தூர அளவைத் தெரிந்துகொள்வதற்காகும்.

◇ **பட எண் : 53**

காட்டப்பட்டுள்ள அகலத்திற்குக் கூடுதலான அகலம் கொண்ட வாகனமோ, சாமான் ஏற்றப்பட்ட வாகனமோ பிரயாணஞ் செய்வது கூடாது.

◇ **பட எண் : 54**

◇ காட்டப்பட்டுள்ள உயரம் உடைய வாகனமோ; சாமான் ஏற்றப்பட்ட வாகனமோ பயணஞ் செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

◈ ட எண் : 55

காட்டப்பட்டுள்ள பாரத்திற்கு கூடிய எடை உடைய வாகனம் உட்செல்லக் கூடாது.

ட எண் : 56

காட்டப்பட்டுள்ள எச்சல் பாரத்திற்குக் கூடுதலான பாரம் உடைய வாகனமோ; சாமான் ஏற்றப்பட்ட வாகனமோ பயணஞ் செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

◈ ட எண் : 51

காட்டப்பட்டுள்ள வேகத்திற்குக் கூடுதலான வேகத்தில் வாகனம் பயணஞ்செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

◈ ட எண் : 52

வாகனங்களில் வேகம் சம்பந்தப்பட்ட கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது.

◈ ட எண் : 64,83

சிறிய பாதையிற் பயணஞ் செய்யும் வாகனங்களினாற் பிரதான பாதையிற் பயணஞ் செய்யும் வாகனங்களுக்கு இடமளிக்க வேண்டுமென அடிப்படையான சிறு பாதையில் வாகனஞ் செலுத்தும் சாரதிகளுக்கு அறிவித்தல்.

◈ ட எண் : 65, 81

சிறிய பாதையிற் செல்லும் பயணஞ் செய்யும் வாகனங்களைக் கட்டாயமாக நிறுத்தி, பிரதான பாதையிற் பயணஞ் செய்யும் வாகனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென மேற்படி பிரதான பாதையிற் செல்லும் வாகன சாரதிகளுக்கு அறிவித்தல்.

◈ ட எண் : 67

பிரதான பாதைக்கு உட்புகும் சிறிய பாதையிற் பயணஞ் செய்யும் வாகனத்தினால், பிரதான பாதையின் வாகனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டுமென மேற்படி பிரதான பாதையிற் செல்லும் வாகன சாரதிகளுக்கு அறிவித்தல்.

◇ பட எண் : 68

பிரதான பாதையிற் செல்லும் வாகனங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது முடிந்துவிட்டன என்பதைப் பிரதான பாதையிற் பயணஞ் செய்யும் சாரதிகளுக்கு அறிவித்தல்

◇ பட எண் : 69

பாதையின் குறுகிய பகுதியை நோக்கி அண்மிக்கும் வாகனங்களின் சாரதிகளினால், அதன் குறுகிய பகுதியில் எதிரில் வரும் வாகனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென அறிவித்தல்.

◇ பட எண் : 70

பாதையிற் குறுகிய பகுதியின்முன்னே செல்லும் வாகனங்களுக்கு சாரதிகளினால் முக்கியத்துவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதை அறிவித்தல்.

◇ பட எண் : 63

சுற்று வட்டத்திற்கு (சுற்றுவளைவு) அண்மிக்கும்போது, வாகன ஓட்டப் பாதையில் (படம் 82 ஐப் பார்க்கவும்) வீதி அடையாளத்தில் வலப்பக்கமிருந்துவரும் பாதையிலும் சுற்று வளைவின் வலதுபக்க ஓட்டப்பாதையில் அண்மிக்கும் சகல வாகனங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கவும். அம்பு அடையாளத்திற் காட்டியுள்ள திசைக்கு ஏற்றவாறு வாகனத்தை அவ்விடத்திலிருந்து கடக்கவும்.

◇ பட எண் : 78

பாதையிற் சைக்கிளின் உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்ட ஓட்டப்பாதை ஆரம்பிக்கும் இடம்.

◇ பட எண் : 74

பாதையில் பஸ்வண்டிகளுக்காக ஒதுக்கப்பட்ட ஓட்டப்பாதை ஆரம்பிக்கும் இடம்.

◇ பட எண் : 97

பாதை அடையாளங்களுக்கு இருபக்கத்தில் ஓட்டப்பாதையில் நெடுக ஒவ்வொன்றுக்கும் எதிருக்கு எதிரான திசைக்கு வாகனப்போக்குவரத்து நடைபெறும்போது (வலதுக்கு

திருப்புதல்) உட்புகுதல் பாதுகாப்பற்றதெனச் சாரதி கண்டால் அல்லது உட்புகுதல் கூடாது. ஒட்டப்பாதையில் ஆபத்தான பகுதி வாகனங்களுக்கு அறிவுறுத்தும் நோக்கிற் பாதையின் மேல் குறிக்கப்பட்டுள்ள பாதை அடையாளம்.

- ப. எண் : 98

  பாதை அடையாளங்களுக்கு இரு பக்கமும் பாதையைப் பிரித்து ஒட்டப்பாதையின் நெடுகிலும் ஒரே திசையில் (படவிளக்கத்தில் இருந்து) வாகனப் போக்குவரத்துச் செய்யும் சந்தர்ப்பங்களில் ஆபத்தான பகுதியை வாகனங்களுக்கு அறிவுறுத்துவதற்காகப் பாதையின்மேல் குறித்துள்ள பாதை அடையாளம்.

- ப. எண் : 108

  சிவப்பு மனிதன்

  பாதசாரிகள் வீதியின் குறுக்கே செல்லுதல் கூடாது.

- ப. எண் : 109

  பச்சை மனிதன்

  பாதசாரிகள் பாதையின் ஊடாக கடந்து செல்ல முடியும்.

# அபாய எச்சரிக்கை சைகைகள்



1.
இடது பக்க வளைவு
முன்னால்



2. ★
வலது பக்க வளைவு
முன்னால்



3.
இடது பக்கமாக
இரட்டை வளைவு
முன்னால்



4.
வலப் பக்கமாக
இரட்டை வளைவு
முன்னால்




5. ★
முன்னால் வலது
பக்கத்துக்கு கொண்டை
ஊசி வளைவு



6. ★
முன்னால் இடது
பக்கத்துக்கு கொண்டை
ஊசி வளைவு



7. ★
முன்னால் இரட்டை
வாகனப் பாதையின்
முடிவு




8. ★
முன்னால் பாதை
ஒடுங்குகிறது



9. ★
முன்னால் குறுக்கு
வீதிகள்



10.
முதலாவது பக்கப் பாதை இடது பக்கமாக அடுத்தடுத்து வரும் சந்தி முன்னால்



11.
முதலாவது பக்கப் பாதை வலது பக்கமாக அடுத்தடுத்து வரும் சந்தி முன்னால்



12.
T வடிவ சந்தி முன்னால்



13. ★
Y வடிவ சந்தி சந்தி முன்னால்



14. ★
இடமிருந்து வரும் வாகனம் பிரதான பாதையில் இணையும் சந்தி முன்னால்



15.
வலமிருந்து வரும் வாகனம் பிரதான பாதையில் இணையும் சந்தி முன்னால்



16. ★
குறுகிய பாலம் ஒன்று முன்னால்



17. ★
முன்னால் நிறுத்தவும்



18. ★
முன்னால் வழி விடவும்



19. ★
முன்னால்
சுற்றுவளைவு



20. ★
முன்னால்
ஒளி சைகை



21. ★
ஆபத்தான சரிவு
முன்னால்
(கீழ்நோக்கிய)



22.
ஆபத்தான ஏற்றம்
முன்னால்



23. ★
வழுக்கும் பாதை
முன்னால்



24. ★
கற்பாறைகள் விழும்
இடம் முன்னால்



25. ★
முன்னால் பாதசாரிகள்
கடவை



26. ★
முன்னால் பிள்ளைகள்
கடவை



27. ★
முன்னால் பாதை வேலை



28.
முன்னால்
பாதுகாப்புடைய
புகையிரதக்கடவை



29. ★
பாதுகாப்பற்ற
புகையிரதக் கடவை
முன்னால்



30.
முன்னால் பஸ்வண்டி
ஒழுங்கை



31.
முன்னால் துவிச்சக்கர
வண்டி ஒழுங்கை



32.
முன்னால் துவிச்சக்கர
வண்டி கடவை



33. ★
மந்தை அல்லது
விலங்கு முன்னால்
பாதையைக் கடக்கக்
கூடும்



34.
ஓடத்துறை ஒன்றிலுள்ள
வீதி முன்னால்



35.
முன்னால் நீர்
வழிந்தோடும் பகுதி



36.
முன்னால்
வேகத் தடை

# தடைசெய்யும் சைகைகள்

## ஒழுங்குபடுத்தும் சைகைகள்



37. ★
உட்பிரவேசித்தல் கூடாது
(உட்பிரவேசித்தல் தடையான போதும் எதிர் திசையிலிருந்து வரும் வாகனங்களுக்கு வர முடியும் என்பதே)



38.
இடப்பக்கம் திரும்பாதே.



39. ★
வலப்பக்கம் திரும்பாதே.



40. ★
U உருவில் இருக்குமாறு திரும்பாதே.
முடக்கு திரும்ப தடை



41. ★
வாகனங்கள் முந்திச் செல்லத் தடை



42. ★
ஒலி எழுப்பத்தடை
(தடை செய்யும்)



43. ★
வீதி மூடப்பட்டுள்ளது
(இப்பாதையில் உட்புகுதலும் எதிர் திசையில் இருந்து வருவதும் தடையாகும்)



44.
லொறி வண்டிகளுக்கான பாதை மூடப்பட்டுள்ளது.



45.
பஸ்வண்டிகளுக்கான பாதை மூடப்பட்டுள்ளது.



46. ★

சகல வாகனங்களுக்கும் பாதை மூடப்பட்டுள்ளது.



47. ★

வாகனம் நிறுத்தி வைத்தல் தடை.



48. ★

வாகனம் நிறுத்தி வைப்பதும் ஏற்றுவதும் கூடாது.



49. ★

ஒற்றை நாட்களில் வாகனம் நிறுத்தக்கூடாது.



50. ★

இரட்டை நாட்களில் வாகனம் நிறுத்தக் கூடாது.

## மட்டுப்படுத்தும் சைகைகள்




51. ★

வேக எல்லை




52. ★

வேக எல்லை முடிவு




53.

அகலத்தின் வரையறை




54.

உயரத்தின் வரையறை




55. ★

எடையின் வரையறை
(மட்டுப்படுத்தும் செய்கை)




56.

எக்சலுக்கு மேலே இருக்க வேண்டிய பாரம்

# கட்டாய சைகைகள்

## முக்கியத்துவமான சைகைகள்



57.
இடப்பக்கம் திரும்பு



58.
வலப்பக்கம் திரும்பு



59. ★
முன்னால்
இடப்பக்கம் திரும்பு



60. ★
முன்னால்
வலப்பக்கம் திரும்பு



61. ★
இந்தப்பக்கமாக
கடந்து செல்



62.
நேரே செல்



63. ★
கட்டாய சுற்று
வளைவு



64. ★
வழி விடவும்
பாதையில் வழி விடவும்




65. ★
நிறுத்து



66. ★
பாதுகாப்பற்ற
புகையிரத
குறுக்கு வீதி



67. ★
முக்கியத்துவ
வீதி
(முன்னுரிமை வீதி)



68. ★
முக்கியத்துவ
வீதி முடிவு



69.
முன்னால் வரும்
வாகனங்களுக்கு வழி
விடு.



70. ★
முன்னே செல்லும்
வாகனங்களுக்கு
வழி விடு.

# சாரதிகளுக்கு பயனுள்ள வேறுசைகைகள்



71. ★
ஒரு திசை வழி
(ஒற்றை வழிப்பாதை)



72. ★
பஸ் வண்டி
தரிப்பிடம்




73. ★
வாகனம் நிறுத்துமிடம்




74.
பஸ் வண்டி மட்டும்
செல்லும் ஒழுங்கை
ஆரம்பம்



75. ★
பாதசாரிகள் கடவை
(பாசாரிகள் மாறும் இடம்)



76.
பஸ் வண்டி மட்டும்
செல்லும்
ஒழுங்கை முடிவு



77.
ஆஸ்பத்திரி



78.
துவிச்சக்கர வண்டி
மட்டும் செல்லும்
ஒழுங்கை ஆரம்பம்



79.
துவிச்சக்கர வண்டி
மட்டும் செல்லும்
ஒழுங்கை முடிவு

# பாதையின் மேல் அமைந்துள்ள வீதிக் குறியீடுகள்



80. ★

வாகனங்கள் ஒளி சைகை மூலமாகவோ பொலிஸ் மூலமாகவோ செயல்படும் வீதிகள் பிரிந்து செல்லும் சந்திகள் நிறுத்தும் கோடு



81. ★

நிறுத்து என்ற சைகை அமைந்துள்ள கோடுகள்



82. ★

சுற்று வளைவில் அமைந்துள்ள வழிவிடும் கோடு சுற்று வளைவில் வலப்பக்கமிருந்து வரும் வாகனத்திற்கு இடமளிப்பது எவ்விடத்தில் என்பதை விளக்க அமைந்துள்ள நிறுத்தும் கோடு



83. ★

வழி விடு எனும் கோடு பிரதான வீதியிலிருந்து இருபுறமும் வரும் வாகனங்களுக்கு வழிவிட்டு ஓட்ட வேண்டும்



84.
ஓடும் ஒழுங்கு அடையாளம்



85.
குமிழ்க்கல் (பூனைக்கல்)



86. ★
வலது பக்கம் திரும்புவதைத் தவிர குறுக்கீட்டைத் தடை செய்தும் நடுக்கோடு



87. ★
வாகனங்கள் நிறுத்தி வைப்பது கூடாது என்பதை ஓரத்தில் நெடுகலாக அமையும் கோடு காட்டுகிறது.



88. ★
குறுக்கீட்டைத் தடைசெய்யும் நெடுங்கோடு



89.
ஓடும்
ஒழுங்கைக்
குறியீடு



90.
வளைவொன்றின்
ஓரத்தைக்
காட்டும் நெடுங்கோடு



91.
அபாய
எச்சரிக்கைக்
கோடு



92.
மத்தய கோடும்
உடைந்த
கோடும்



93. ★
செல்லும்
வழியில் ஓரம்
(நடைபாதைக் கோடு)



94. ★
பாதசாரிகள் கடவை

★1. நிறுத்தும் எதிர்பார்ப்புடன் செல்ல வேண்டும்.

★2. கடவையால் மட்டும் கடக்க முடியும்.

★3. 15மீற் அப்பால் நிறுத்த முடியும்.

★4. முந்திச் செல்ல முடியாது.

★5. ஆபத்தான வளைவுகளிலும் முந்திச் செல்ல முடியாது.



95. ★
சந்திப்பெட்டி



96. ★
சந்திப்பெட்டி

★( வலது பக்கம் திரும்பிச் செல்ல முடியாது எனின் உட்செல்லக்கூடாது.)

## அபாயகரமான பிரதேசம்



97.
எதிர்த்திசையிலான
போக்குவரத்து



98.
ஒரே திசையிலான
போக்குவரத்து




★99.
தகுதியான வண்டி ஓடும்
வழியை வாகனங்களுக்கு
காட்டுவதற்கு அமைந்துள்ள
அடையாளம்




100.
கட்டாயமாக இடது பக்கத்திற்கு திருப்ப வேண்டும் என வாகனங்களுக்கு அறிவிக்க காட்டியுள்ள அடையாளம்.




101.
கட்டாயமாக நேரே செல்ல வேண்டும் என வாகனங்களுக்கு அறிவிக்க காட்டியுள்ள அடையாளம்




102.
கட்டாயமாக வலது பக்கத்திற்கு திருப்ப வேண்டும் என வாகனங்களுக்கு அறிவிக்க காட்டியுள்ள அடையாளம்

**STOP**

103.
நிறுத்தல் சைகை அடையாளங் கொண்ட வீதியின் முக்கிய இடம் அண்மிக்கின்றதென அடையாளம் காட்டும் சைகை

**SLOW**


104.
முன்னே அதிக கவனத்துடன் செல்ல வேண்டுமென அறிவுறுத்தும் அடையாளம்

**BUS LANE**

105.
வசுவண்டி செல்லும் ஒழுங்கை

**CYCLE LANE**

106.
துவிச்சக்கர வண்டி செல்லும் ஒழுங்கைதுவிச்சக்கர வண்டி கடவை.




107.
செல்லும் வழியில் ஓரம்

## பாதசாரிகளுக்கான சைகை



108.
சிவப்பு மனிதன்



109.
பச்சை மனிதன்

# தகவல் கொடுக்கும் சைகைகள்

## (விசேட ஒழுங்கு படுத்தும் சைகைகள்)


110.
கடுகதிப் பாதை


111.
கடுகதிப்பாதை
முடிவு


112.
பாதசாரி கடக்கும்
நிலக்கீழ்ப் பாதை


113.
பாதசாரி கடக்கும்
மேல்ப் பாதை


114.
பாதசாரிகளுக்கு
மட்டுமான வீதி


115.
வாகனங்களுக்கான
வீதி


116.
வாகனங்களுக்கான
வீதி முடிவு


117.
மெதுவாககச் செல்லும் வீதி
பாவனையாளர்களின்
திசைகாட்டி

# பாதைகளுக்கான வழி இலக்கச் சைகைகள்

**E 4**

118.
கடுகதிப்பாதைக்கான
வழி இலக்கச்
செய்கை


**A 15**


119.
"A" வகுப்பு
நெடுஞ்சாலைக்கான
வழி


**B 112**


120.
"B" வகுப்பு
நெடுஞ்சாலைக்கான
வழி

# சேவை வசதிக்குரிய சைகைகள்


121.
பொதுத்
தொலைபேசி


122.
தகவல்
மையம்


123.
எரிபொருள்
நிலையம்


124.
தொழிற்
சாலை


125.
பழுது பார்ப்புச்
சேவை


126.
சிற்றுண்டி சாலை


127.
உணவு விடுதி


128.
விடுதி


129.
பகிரங்கக்கடற்கரை


130.
சுற்றுலா இடம்

# விசேட சைகைகள்



131.

அவதானம், தீர்மானம் செயற்பாடு



132.



133. சரியான அமுக்கம் கூடிய அமுக்கம் குறைந்த அமுக்கம்



134.

வீதியின் ஓரக்கோடு நடைபாதைக் கோடு



135.

வாகனம் நிறுத்துவதை தடை செய்யும் எச்சரிக்கும் கோடு



136.

மத்திய நெடுங் கோடு (மத்தியகோடு)



137.

இரட்டை மத்திய நெடுங்கோடு (வலது பக்கம் திரும்பத் தடை)



138.

ஒளிச்சைகை/ பொலிஸ் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிறுத்தற் கோடு



139.

நிறுத்தற் சைகைகளில் நிறுத்தற் கோடு



140.

சுற்று வளைவில் வழி விடவும் கோடு



141.

வழி விடவும் கோடு



142.

கார் நேராகச் செல்லவும், ஆட்டோ வலது பக்கம் திரும்பிச் செல்லவும் முடியும்



143.

T சந்தியில் கட்டாயம் நிறுத்த வேண்டும்



144.

இரண்டு வாகனங்களும் நேராகச் செல்லவோ, வலது பக்கம் திரும்பவோ முடியாது

## வழிகாட்டும் சைகை



145.

தடை (அட்டை குறியீடு)



146.

மாற்று வழியடைப்பலகை


## பொலிஸ் சமிக்ஞை



முன்னால், பின்னால் வரும் வாகனங்களை நிறுத்து



நிறுத்துங்கள்



பின்னால் வரும் வாகனத்தை நிறுத்து



முன்னே வா



முன்னே வாருங்கள்

## தகவல்தரும் சைகைகள்

### முன்னரே நெறிப்படுத்தும் சைகைகள்

147.




148.




149.



150.



151.






152.




153.





154.
தூரத்தை உறுதிப்படுத்தும் சைகை




155.
தூரத்தை உறுதிப்படுத்தும் சைகை

## வழிகாட்டும் சமிக்ஞை





158. இடம் தூரம் காட்டுவது




159. இடம்

## இடத்தை அறிந்து கொள்ளும் சைகை




156.
பிரதேச ஆரம்பம்




157.
பிரதேச முடிவு.

# வழக்குத் தொடர்தலுக்குப் பதிலாக தண்டம் விதித்தல்

| குற்றம் | தண்டம் |
|---|---|
| 01. வேகமாக வாகனம் செலுத்துதல் | Rs. 1000.00 |
| 02. பொருத்தமற்ற இடங்களில் நிறுத்துதல் | Rs. 500.00 |
| 03. பொலிசாரின் பணிப்புரைகள் / சைகைகளை மீறுதல் | Rs. 1000.00 |
| 04. சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் வாகனம் செலுத்துதல் | Rs. 2500.00 |
| 05. 18 வயதுக்குக் குறைந்தவர் வாகனம் செலுத்துதல் | Rs. 5000.00 |
| 06. அனுமதிப் பத்திரம் இல்லாதவரை வேலைக்கு அமர்த்துதல் | Rs. 3000.00 |
| 07. இறைவரி அனுமதிப் பத்திரம் கொண்டு செல்லாமை | Rs. 500.00 |
| 08. இறைவரி அனுமதிப் பத்திரம் கட்டுப்பாடுகளை மீறுதல் | Rs. 1000.00 |
| 09. சாரதியின் சைகைகள் | Rs. 500.00 |
| 10. சாரதி இருக்க வேண்டிய முறை | Rs. 100.00 |
| 11. முன் ஆசனத்திலுள்ள ஆட்களின் எண்ணிக்கை அதிகரித்தல் | Rs. 100.00 |
| 12. ஒலி அல்லது ஒளி எச்சரிக்கைகள் | Rs. 100.00 |
| 13. வாகனத்தைப் பின்னோக்கிச் செலுத்துதல் | Rs. 20.00 |
| 14. மிதிப்பலகைகளில் பிரயாணம் செய்தல் | Rs. 100.00 |
| 15. நிற்பாட்டும்போது கவனிக்க வேண்டிய விதிகள் | Rs. 500.00 |
| 16. மேலதிகமாகப் பிரயாணிகளை ஏற்றுதல் | Rs. 150.00 |
| 17. லொறியில் செல்லக்கூடிய ஆட்கள் | Rs. 150.00 |
| 18. விளம்பரங்களை விநியோகித்தல் | Rs. 100.00 |
| 19. அடையாளம் காணக்கூடிய இலக்கத்தகடு | Rs. 500.00 |
| 20. இலக்கத் தகட்டின் வடிவம் | Rs. 100.00 |
| 21. பெற்றோல் நிரப்பும் போது கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் | Rs. 20.00 |
| 22. பாதுகாப்புத் தலைக் கவசத்தை அணியத் தவறியமை | Rs. 500.00 |

**வீதி விதிகள்**

| | | |
|---|---|---|
| 01. | வீதியில் இடது பக்கத்தால் போகத் தவறுதல் | Rs. 500.00 |
| 02. | ஒட்டப்பாதை மாறித் தடைசெய்தல் | Rs. 500.00 |
| 03. | வாகனங்களை முன் செல்லத் தடை செய்தல் | Rs. 500.00 |
| 04. | தெளிவான பார்வையின்றி முந்திச் செல்லல் | Rs. 500.00 |
| 05. | தவறான முறையில் முந்திச் செல்லல் | Rs. 500.00 |
| 06. | வாகனங்களை நேரே செல்லும்போது அல்லது முந்திச் செல்லும் போது | Rs. 500.00 |
| 07. | வீதியைக் கடக்கும் போது தடை செய்தல் | Rs. 500.00 |
| 08. | வீதியினுள் நுழையும்போது தடை செய்தல் | Rs. 500.00 |
| 09. | ஒரு வீதியிலிருந்து மறு வீதிக்குள் நகரும் போது தடை செய்தல் | Rs. 500.00 |
| 10. | பிரதான வீதியில் வாகனங்களைத் தடை செய்தல் | Rs. 500.00 |
| 11. | வலது பக்கத்து வாகனங்களுக்கு இடம் கொடுக்கத் தவறுதல் | Rs. 500.00 |
| 12. | ஒடுக்கமான வீதியில் போகும்போது வேகத்தைக் குறைத்து, பத்திரமாக செல்லுவதை அனுமதிக்கத் தவறுதல் | Rs. 500.00 |
| 13. | இடது பக்கத்துக்குத் திரும்பும் போது இடது பக்கத்தால் போகத் தவறுதல் | Rs. 500.00 |
| 14. | வலது பக்கத்துக்குத் திரும்பும்போது வாகனத்தை வீதியின் மத்திக்குக் கொண்டுவரத் தவறுதல் | Rs. 500.00 |
| 15. | இறைவரி அனுமதிப்பத்திரம் மோட்டார் வாகனங்களில் கொண்டு செல்லப்படுதலும் தேவைப்படும் போது காண்பிக்கப்படுதலும் | Rs. 1000.00 |
| 16. | இறைவரி அனுமதிப்பத்திரத்தை மீறிப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனத்தின் மீதான மட்டுப்பாடுகள் சாரதி உரிமையில்லாமற் செல்லுவதற்குள்ள தடை | Rs. 1000.00 |
| 17. | மோட்டார் வாகனங்களைத் திருப்புதல் | Rs. 500.00 |
| 18. | பெருவழியில் மோட்டார் வாகனங்களை நிறுத்துதல் அல்லது நிற்பாட்டி வைத்தல். | Rs. 500.00 |
| 19. | மோட்டார் வாகனம் பெருவழியொன்றில் நிறுத்தப்படும் போது அல்லது கவனிக்காமல் விடப்படும்போது அல்லது செயலிழந்த போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் | Rs. 500.00 |

# மோட்டார் வாகன ஓட்டுநர்கள் அவதானிக்க வேண்டியவை

- தாங்கள் தகுந்த நிலையிருந்தாலன்றியும் குடிபோதையிலிருக்கும் போதும் சோர்வாய் அல்லது உணர்ச்சிவசப்பட்டு இருக்கும் போதும் வாகனத்தை செலுத்த வேண்டாம்.
- தங்கள் வாகனம் பொறிமுறை ரீதியில் சீராயுள்ளதா என்பதனை உறுதிப்படுத்துங்கள். செலுத்தும் பொறிமுறைத் தடுப்புக்கள், டயர்கள், விளக்குகள், ஒலிக்கருவி, காற்றுத் திரைத் துடைப்புக்கள், சைகை ஒளிச் சைகைகள் போன்றவற்றில் கூடிய கவனம் செலுத்துங்கள், ஆபரணம் அல்லது அது மாதிரியான அனாவசியமற்ற பொருட்களால் வீதியின் மீதான உங்கள் கட்புலன் இடைஞ்சலாயிருத்தலாகாது.
- பெறுமதி வாய்ந்த சாரதி அனுமதிப்பத்திரத்தினையும் வரி அனுமதிப்பத்திரத்தினையும் தாங்கள் வைத்திருக்க வேண்டும் என்பதோடு குறைந்தது பிறநபர் காப்புறுதிப்பத்திரமேனும் (3rd Party) வாகனத்தின் பேரில் பெற்றிருக்க வேண்டும்.
- தாங்கள் சாரதிப் பயிற்சியாளராயின் அவ்வகுப்பு வாகனத்தைச் செலுத்தக் கூடிய அனுமதிப்பத்திரம் பெற்ற சாரதியொருவர் தங்களுக்கு அறிவுறுத்தவும் உதவவும் தங்கள் பக்கத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும்.
- ஆசனப் பட்டிகள் தங்கள் வாகனத்திற்குப் பொருத்தப்பட்டிருப் பின் அவற்றை உபயோகிக்கவும், தங்கள் வாகனம் விபத்துக் குள்ளானால் முறையாக அணியப்பட்ட ஆசனப் பட்டிகளால் தங்கள் காயங்கள் பெருமளவில் குறையும். இதே காரணத்திற்காக, தங்கள் குழந்தையைப் பின் ஆசனத்தில் விசேடமாக முறையாகப் பொருத்தப்பட்ட சிறுவர் பாதுகாப்பு இருக்கையில் கொண்டு செல்லுங்கள். எப்பொழுதும் சாரதியின் இருக்கையை தங்களுக்கேற்ற விதத்தில் சரி செய்து கொள்ள வேண்டும்.
- மோட்டார் சைக்கிள்கள் ஓட்டுவோர் அங்கீகரிக்கப்பட்ட தலைக்கவசம் அணிதல் வேண்டும். வெள்ளைத் தலைக்கவசமும் மென்னிற ஆடையும் பார்வை குறைவான வேளைகளில் தங்களைத் தெளிவாகக் கண்டுகொள்ள உறுதுணையாயிருக்கும்.
- வாகனத்தைச் செலுத்துமுன், தங்கள் வாகனத்தில் ஆசனப் பட்டிகள் பொருத்தப்பட்டிருப்பின் அவற்றை அணிந்து கொள்ளுங்கள். பின்பக்கத் தோற்றக் கண்ணாடியில் சரிபார்த்து

வலது தோளின் மேலாகவும் பாருங்கள், தேவையெனில், சைகையைக் காட்டி ஏனைய வாகனங்கள் அதன் வேகத்தை மாற்றவோ, செல்லும் வழியை மாற்றவோ இடமளிக்காது பாதுகாப்பானதென அறிந்த பின்னர் மட்டுமே வாகனத்தை எடுங்கள்.

- ஆபத்து வெளிச்சம், தங்கள் வாகனம் இயங்காமலிருப்பதை காட்டுவதற்கு மட்டுமே உபயோகிக்கப்படல் வேண்டுமே தவிர, முன்னுரிமை கோருவதற்கு உபயோகிக்கப்படலாகாது. வாகனம் நிலையாயிருக்கும் பொழுது மட்டுமே இவை உபயோகிக்கப்படல் வேண்டும். விட்டு விட்டெரியும் முகப்பு வெளிச்சங்கள் தாங்கள் இருப்பதனை மட்டுமே குறிப்பிடுமே தவிர தங்களுக்கு முன்னுரிமை தரமாட்டாது.
- நிறுத்தும் தூரமானது வேகத்திற்கு ஏற்ப அதிகரிக்கின்றது. ஓடிக்கொண்டிருக்கும் வாகனத்தை நிறுத்துவதற்கு எடுக்கும் நேரம் அதிகமாகும்.
- வீதிகளில் பிறர் சௌகரியம் கருதாதவராயிருக்காதீர்கள். விரைவாகச் செல்லும் வாகனங்களுக்கு வழிவிடுவதற்காக மெதுவாகச் செலுத்த வேண்டும் அல்லது நிறுத்த வேண்டும்.
- பாடசாலைகள், பாதசாரிகள் கடவைகள், சந்திகள் கூர்மையான மூலைகள், மேட்டுப்பகுதி, பாதுகாப்பில்லாத கடவைகள் என்பவற்றை அணுகும் போதும் வீதி ஈரமாயிருக்கும் போதும் அல்லது பார்வை குறைவாயிருக்கும் போதும் விசேட கவனம் செலுத்துங்கள். பார்வையற்றவர்களிடமும், குழந்தைகளிடமும் விசேட கவனம் செலுத்தவும்.
- கைச்சைகைகள் யாவற்றையும் வாகனம் செலுத்தும் போது அவதானமாக பிரயோகிக்கப்படல் வேண்டும்.
- ஒளியூட்டப்பட்ட பகுதிகளில் தேவையின்றி தங்கள் முகப்பு வெளிச்சங்களை உபயோகிக்காதீர்கள். வீதியில் ஏனைய வாகனங்களைச் சந்திக்கும் பொழுது முகப்பு வெளிச்சங்களைப் பதிவாகப் பாய்ச்சுங்கள். தாங்கள் முந்திச் செல்லக் கருதாத இன்னோர் வாகனத்திற்கு அண்மையாகப் பின்தொடரும் போது முகப்பு வெளிச்சங்களை அணைத்து விடுங்கள் அல்லது தணித்து எரியுங்கள். தங்கள் முகப்பு வெளிச்சங்கள் தணித்து எரிக்கப்படும் போது அல்லது அணைக்கப்பட்டிருக்கும் பொழுது விசேட கவனம் செலுத்துங்கள்.
- வீதி ஒழுங்குக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கவும், சீரான போக்குவரத்தையும் பெறுமதி வாய்ந்த தேசச் சொத்தின் ஆகக்கூடிய பாவனையையும் இது உறுதிப்படுத்துகிறது.

# KIRUBAA LEARNERS
## கிருபா லேணர்ஸ்

Reg.No : DS 589
**Government Approved**
**A Grade Driving Training School**

226. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 4353 / 021 492 3200 / 077 722 5292

- 227/6 கே.கே.எஸ் வீதி,
  சுன்னாகம்.
  (மதவடி அண்மையில்)
  021 224 2022 / 071 454 6956

- கண்டி வீதி,
  சாவகச்சேரி.
  (நீதிமன்றம் அண்மையில்)
  021 227 0700 / 021 492 3202

- முதலாம் கட்டைச்சந்தி,
  பருத்தித்துறை.
  021 492 3201/071 454 6958

- விக்னேஸ்வரா கல்லூரி வீதி,
  நெல்லியடி.
  021 300 6550 / 071 454 6957

- 36, கச்சேரி நல்லூர் வீதி,
  (கச்சேரி அருகாமை)
  யாழ்பாணம்.
  076 722 5292 / 071 777 5454

- 216, A9 வீதி,
  வவுனியா.
  (வசந்தி திரையரங்கு முன்பாக)
  024 222 7777
  0777 100 444

- ஓம்பிளாசா, பருத்தித்துறை வீதி,
  ஆவரங்கங்கால்.
  021 222 6688
  071 777 6969

- A9 வீதி,
  கிளிநொச்சி.
  (கச்சேரி முன்பாக)
  021 228 5505 / 071 454 6955

- புளியடிச்சந்தி,
  முல்லைவீதி விசுவமடு.
  021 320 1515 / 071 454 6955

- நாச்சிக்குடா சந்தி,
  மன்னார் வீதி.
  முழங்காவில்
  021 300 6544 / 071 454 6955

- வாடியடி சந்தி,
  பூநகரி.
  021 320 1818 / 071 454 6955

- 94, பிரதான வீதி,
  மன்னார்.
  023 225 1656
  077 847 2732

